



ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவன்
ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்
திருப்புல்லாணி
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்



ஸ்ரீ:

## முகவுரை.

வாரக் கலகம் வருவிக்கு மாந்தரையிவ்

வூராருள் வையாதொ ருங்கொழிக்கச் --- சீரார்

அயிந்தை மலைகோயி லயக்கிரீ வாநின்

கையின் படையை வேண்டுகின்றேன்காண்.

( அயக்ரீவர் துதி )

அகரவாச்யனே **அயக்ரீவன்**. அவனே உலகனைத்துக்கும் முதற்றனிவித்து. அன்று இவ்வுலகினை ஆக்கி, அருமறை விரிக்கும் பரஞ்சுடரே பரிமுகனாம் பரப்பிரமம்.
அன்னவன் கனையின் எதிரொலியே மறையாகும். அவனது லாலாவமுதமே ஆராவமுதம்.
அன்னவன் சிங்காது வீற்றிருக்கும் சிங்காசனம் திருமறையாரியர் செந்நாப்போதே. அவனது திருக்கோயில் அவரது திருமனமே. மதிநல மருளும் பரம்பொருளே பரிமுகப்பெருமான். அன்னவன் திருவவதாரமே மறைமுடித்தேசிகனார். "முன் இவ் வுலகேழும் இருள்மண்டி யுண்ண முனிவரொடு தானவர்கள் திசைப்ப வந்து, பன்னுகலை நால்வேதப் பொருளை யெல்லாம் பரிமுகமாய் அருளிய எம் பரமன் காண்மின்" (பெரிய திருமொழி 7-8-2) என்றும், "வசையில் நான் மறை கெடுத்த அம் மலரயற்கு அருளி முன் பரிமுகமாய், இசைகொள் வேதநூ லென்றிவை பயந்தவனே!"

(பெரிய திருமொழி 5-3-2 ) என்றும் 'வையமெலாம் மறைவிளங்க வாள்வேல் ஏந்தும்' மங்கையர்கோன் கண்டமை காட்டியருளுதல் காண்க.

பரிமுகப் பரத்துவத்தின் திருவெழில் காட்டும் படிமக்கலமே வேதம். அவ்வேதமே கருளப்புள். கருளப்புள்ளேறும் பரஞ்சுடரே அயக்கிரீவன். வேதமுடி பூக்கும் தத்துவம், வேதம் அருளும் தத்துவம் என்னும் அப்பரதத்துவமே பரிமுகன் என்னும் அயக்கிரீவன். அவனே முதுவேத முதல்வன், வைதிகர்கட்கிறைவன், மதிநலம் அருளும் திருவருட்பரமன்.

மும்மறையறையும் இம்மெய்ம்மையை உலகு உணர்ந்து அன்னவன் திருவருள் பெறுமாறு "ஹயக்ரீவ ஸ்தோத்ரம்" என்ற ஓர் நற்றுதியை வேதாந்த தேசிகனார் வடமொழியிற் பாடியருளியுள்ளார். இது ஸ்ரீ வைநதேயனால் உபதேசிக்கப்பெற்ற ஸ்ரீஹயக்ரீவ மந்திரத்தை ஆவ்ருத்தி செய்த காலத்தில் ப்ரத்யக்ஷமாகி ஸர்வ வித்யா மூர்த்தியான தம்முடைய திவ்ய லாலாம்ருதத்தை அளித்து நம் வேதாந்த குருவை அநுக்ரஹித்து அருளின ஸ்ரீஹயக்ரீவன் விஷயமான தோத்திரம். இதில் பரிமுகப்பெருமானுடைய அவதார சரித்திர விசேடங்களும் திருமேனி வர்ணனமும் நிரூபிக்கப்பெற்றுள்ளன. "பெருகுகவி மழைகள்-- சொரிய நினைவுகொண்டு, வெள்ளைப்பரிமுகர்மீதில் -- துதியானதுரைத்து" என்பது ஸ்ரீமத் வேதாந்த தேசிக வைபவ ப்ரகாசிகைக் கீர்த்தனை. "வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகா லடியோம், உள்ளத்து எழுதியது ஓலையில் இட்டனம்"----( தேசிக மாலை, அதிகார சங்கிரகம் ) என்பது மறைமுடித் தேசிகனார் அருண்மொழி. அத்திருத்துதியை இச்சங்கத்தவராகிய கீழ்வீதிப்ரயாகை ஸ்ரீநிவாஸராகவாசாரிய ஸ்வாமி, தாம் ஓதி உணர்ந்து அநுபவித்தவாறே இனிய தமிழ்ப் பாக்களாக இசைத்துள்ளார். அப் "பரிமுகன் துதி" "**அயக்ரீவ மாலை**" என்ற திருநாமத்துடன் இச்சங்கத்தின் 63-ஆவது வெளியீடாகப்பிரசுரிக்கலாயிற்று.

இம்மாலை வெளிவர பூரண உதவிபுரிந்த புண்ணியர் ஸ்ரீமான்V. கிருஷ்ண ஸ்வாமி சர்மா அவர்கள், G.D.A.,A.C.A., Chartered Accountant, (Proprietor, The Little Flower Co., Publishers of the Lifco Books, Bhurangam, 8, Ranganathan Road, T.Nagar, Madras-17) அன்னவர்கட்கு எமது மனமார்ந்த வந்தனம்.

பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக.

ஸ்ரீரங்க விலாசம், ப.ரெ. திருமலை அய்யங்கார்,
அம்பத்தூர் 23.5.54 காரியதரிசி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# அயக்கிரீவ மாலை

------------

உணர்வா ரின்ப மாவானை யுலக மாக்கி யழுக்கொன்றும்
புணர்வில் சோதிப் பிறங்கொளிசேர் புனிதப் பளிங்குநிறத்தானை
உணர்வார் கலைக ளனைத்திற்கு முயிர்தந் தேந்தும் பரிமுகனை
உணர்வால் வாக்கால் காயத்தால் உன்னிப் புகழ்ந்து பணிவேனே. 1

தானே தோன்றித் தூப்படிகத் தடவரை புரைதிருமேனியனாய்
தண்ணா ரின்சுதை தனைநிகர்க்கும் தனதொளி யாளிவ்
வுலகனைத்தும்
கானா ரெயிற் கரிந்திடலைக் கழித்துக் குளிர்வித் தருள்வானைக்
கான மறைக ளீறிலவை யனைத்தும் தொடரும் பெருமைத்தாம்
வானார் கனைப் பொலிக் கண்ணியனை வந்தடை யும்நலத்
தடியவர்க்கு
மாள்விப் பானை யேதமெலாம் எஞ்ச லேதும் பின்பின்றி
கோனைத் திருவுடன் திகழ்கின்ற குதிரை முகத்தெங்குணக்
குன்றைக்
கொழுஞ்சுடர்ச் சோதியைக் கலைக்கிறையைக் கொடு
வினையேன் றொழு தேத்து வனே. . 2.

உள்ளம் நிலவு மிருளுக்கோர் ஒளிகொள் நல்விடி வதுவாகிக்
கள்ளம் தவிர்க்கு மறிவென்னும் கண்ணுக் கரிய மைத்திருவாய்
வள்ளல் மறைகள் உரைப்பானவ் வண்பரி முகன்வா கீசப்பேர்
கொள்ளும் வாசு தேவனொரு கோள்கொண் டெற்குவிளங்குகவே. 3

உடலெடுத் தாருக் கெல்லாம் உவந்தடைக் கலமாய் நிற்பாய்
கடலருட் கானாய் ஞானம் கனத்தநற் றூயனாகித்
திடனமர் பேரு ணர்வே தெரித்திடும் விரதம் பூண்டாய்
சடனுமே நீங்க வென்றே சரண்புக் கேன் பரிமுகத்தாய் 4.

தூவடி வதுவே சாமத் தூமறை யாகிப் பின்னும்
மேவிட மிருக்குக் காகி மிகும்யசுப் பொருளு மாகி
மாய்விட மிடர்க ளுக்காய் மலியலை போத நீர்க்காம்
மாவடி வான னத்தாய் மருள்செகும் நின்க னைப்பே 5.

நின்கனைப் பொலியேநாத!நினைத்தவா செல்லும் பொல்லாப்
புன்மனத் தவர்கள் வாதப் புரட்டெல்லாம் வெருட்டி யோட்டி
நன்மனத் தவர்கள் மெச்சு நான்மறை நெறி விளக்கும்
வன்மைனன் கெய்தும் வண்ணம் மாமுகா வர்ள்க வெற்கே. 6.

மனிதராற் செயப் பெறாத மன்னுபல் சுருதி யாவும்
உனதரும் பெருங்கு ணங்கள் ஓரொன்றி னிறுதி காணா
எனிதரோ! நின்னை யேத்த வெண்ணினே னிளைய னென்று
உனதருட் கடைக்க ணாலே உடையவா! நோக்கி டாயே. 7.

தென்றிசை நோக்கு மீசன் திகழுநன் மூர்த்தி தானும்
நின்றிரு வுந்திப் பூமேல் நிமலன்றன் றேவி யாரும்
நின்றனர் புகழ்கொள் நாவர் நெடுந்தவ வியாச ரன்னார்
உன்றினித் திறலிற் சற்றே யுருதலால் ஒளியின் மிக்கார். 8.

அருமறை கொண்டொ ளித்த வசுரரைச் செற்ற வற்றை
யருணிறைந் தோதிப் பின்னும் அயனுக்குத் தந்தி லாயேல்
பொருடுறந் திடுத லன்றிப் புந்தியுங் கலையி னாதா!
இருணிறைந் திருப்ப னன்றே ஈரிரு முகத்தி னானே. 9.

பொய்திகழ் யுத்தி யாலே பொருந்திடா தலைதல் நீக்கி
மெய்திகழ் மதியி னோடு விளங்கநீ வியாழன் தன்னைச்
செய்தருள் புரித லாலே தேவர்கோ னரசு மூசல்
எய்திடா துறுதி பெற்றங் கிருந்திடும் பரிமு கத்தாய். 10.

எழுசிகை யனலுறும் வேள்வியினில் இன்னிசை யிருங்கொலி
யருக்கொடுநீ
பழுதறு மிரதங்கொள் புனிதவவிப் பாகங்கள் முழுமையும்
பெற்றதனால்
எழிலுறு வானுறை யிமையவர்கள் எண்ணில ரவர்தமக்
கெண்ணமதில்

பொழிகுவை களிமழை பரிமுகநீ புண்ணிய! வவர்க்குயிர்
நிலையலையோ? 11.

காணுமிப் பொருள்கட் கெல்லாம் காரண மாகும் வேத
மாணெனும் மரங்க ளுக்கும் மாறிலட் சரமே மூலம்
வாணிலா வுருவ நீயே வழுவிலட் சரத்து நிற்பாய்
காணுமெய் யறிவி னோர்கள் கண்டதோ ருண்மை யீதே. 12.

முன்புரு வின்றி நின்ற வொன்றினைப் பிரிவு செய்து
இன்புரு வங்க ளோடே எழிற்பெயர் களையுந் தந்து
தன்புடை யவைகட் கெல்லாம் தங்கிடம் கடையி லாகும்
நின்படி தனைநி னைப்பார் நிமலர்தாம் கலையி னாதா!

முன்புரு வின்றி நின்ற வொன்றினைப் பிரிவு செய்து
இன்புரு வங்க ளோடே எழிற்பெயர் களையுந் தந்து
தன்புடை யவைகட் கெல்லாம் தங்கிடம் கடையி லாகும்
நின்படி தனைநி னைப்பார் நிமலர்தாம் கலையி னாதா! 13.

ஆனந்த மெனுமமுதங் காலுமிள நிலவாம்
அலைபொங்கு பாற்கடல்போல் யாரும் விரும் புவதாம்
ஈனந்த ழாதநின தெழிலுருவ மதனை என்று மிடை
வீடின்றி யிருளகல வைத்து
ஞானந்த னாலுயரும் நல்லவர்தம் மனத்தே நனிமிக்க
கனிவெய்தி பத்திபயின் றிடுவார்
தேனுந்து மலர்துளவம் செறியுநறுந் தாராய்!
சிந்தையலர் கலையாவும் தந்தபரி முகனே! 14.

மனமெனும் மடுவுள் மேவி மகிழ்ந்திடு மரச வன்ன
மனவுனை யிதயத் துள்ளே யமர்த்திடும் மதியி னோர்க்கு
மனமுன மென்று தம்முள் மொய்த்தெலாக் கலைக டாமே
இனமின மாகச் சேர்ந்தே யியன்றநல் லேவல் செய்யும். 15.

தரை யொளிர்க் கதிர்க ளாலே சதிர் பெறு ஞானந் தன்னால்
அரைக்கண மேனு நின்னை யன்பொடு முன்ன கிற்பார்
உரைக்கணக் கலுழி மேவி யுறுதடை யின்றிக் கங்கைத்
திரைப்பெருக் கும்பின் றங்கத் திகழ்வர்தாம் பரிமுகத் தாய்! 16.

உடையவா! நின்றி றத்த உணர்வெனு மமுத மாடி
உடலெலாம் புளகம் போர்த்தா ருள்ளத்தே வேர்த ரித்து
திடனுற வானந் தந்தான் திண்கொள வங்கம் தோறும்
படருற வரும்பெ டுத்த பண்பெனப் பொலிவர் தாமே. 17.

உன்முக விதயத் தாலே யுன்றனை யுன்ன லென்னும்
தண்மதி யுதிக்க வந்த தவத்தினார்க் கின்ப மார்ந்த
வண்மனத் தாழி பொங்கி வரையெலாங் கடந்தெழுந்து
கண்மடை திறந்தா னந்தக் கண்ணீர்ப் பெருக்கெ டுக்கும் 18.

மகிமையி லெண்ணின் மிக்கார் மற்றுன்பா லெண்ணம் வைத்தார்
மிகுமுன தருளி னாலே வென்றதன் வன்மை யெல்லாம்
தகுமுணர் வுற்ற நல்லோர் தருமயல் மாயை தன்னைச்
சுகமதாய்க் கடந்து செல்வார் துறப்பரும் நின்ன தேனும். 19.

முனிற்புரி தவத்தின் பேறாம் முதல்வநின் தாமரைத் தாள்
தனிற்புரி வணக்க மென்னும் தனித்திரு வோங்க வெற்கு
நினைத்தொறும் புதுமை மாறா நிகரில்பே ரின்ப மெய்த
நினைத்திடும் பயன்க ணல்கும் நற்சிந்தா மணிய தாமே. 20.

தலையெழுத் தின்வ ரிக்கள் தமையெலா முன்றனற்றாள்
மலருகுத் திடுவி ரைக்கொள் வண்துக ளிழித்தொ ழிக்கும்
தலைவநின் னருள்சு ரந்தே தமியன்மேல் மேலு மேலும்

தலைமிசை சூட்டு தேவர் தலையிலங் கணியி ணைத்தாள் 21.

விளங்குபே ரொளி மிகுத்தே வியப்புற்றா ரிருள்கெ டுக்கும்
இளங்கதிர் நிகழ்ச்சி லம்பால் இலங்கநற் செவ்வி சேர்ந்து
வளங்கொளு மறிவெ னும்மா வனசவொண் மலர்வி ரிக்கும்
களங்கமில் வடிவ நின்றன் கழலிணை யுன்னு வோமே. 22.

நின்னடி யார்க ளுக்கு நிகரிலா வருங்க லங்கள்
மன்னிட வூழி தன்னில் மன்னவ நீயே காக்கும்
நன்மறை யுரைக ளுக்காம் நல்லதோர் பேழை நின்றன்
மின்னிசை யொலி மிழற்றும் இணைமணிச் சிலம்பு தானே. 23.

பொழுதினி லெழுமொளிக் கொள் புந்தியி லிருப்ப தாகி
வழுவிலாச் சமய மென்னும் விளக்கினை வளர்க்கு நன்கு
முழுதுணர் கற்ப கத்தின் முளைத்தெழுந் தளிர்க ளாநின்
விழுமிதாம் வித்த கம்சேர் வியன்கரம் கருத்திற் கொள்வாம். 24.

கருத்தினி லிருத்து வோம்யாம் கதிர்பெறு மங்க மாலை
பொருந்திடு நாத நின்றன் புகழ்வலக் கரமு ணர்வாம்
அறும்பெற வமுதை வேட்கும் அடியவர்க் கதையெ டுக்க
உறம்பெறு மேற்ற மென்ன உணர்தரத் திகழு மன்றே. 25.

அறிவினல் லாழி யாகி யங்கெழில் பவள வல்லி
செறிந்தெனச் சிவந்தி லங்கிச் சீர்கொள்புத் தகந்த ரித்து
செறியுநல் லவர்க்கு ஞானம் சிறப்புறத் தருவ லங்கொள்
நெறிகொளும் நின்னி டக்கை நெறியுடன் நினைகு வோமே. 26.

வயங்கொளிக் கதிக ளாலே வல்லிருள் தனைப்பி ளந்து
மயங்கலில் சகோரப் புள்ளாம் மதியினார் மனங்க ளிப்பக்
கயங்கொள்தா மரையின் மீதே காறிற்காய் சந்தி ரன்போல்
வயங்கொளி யுருவ! நின்னை வலமுறக் காணுவோமே. 27.

தேவ! நின் னருட் டிரைகள் செல்வழிச் செல்லுநின் கண்
மேவமெம் மீது வைப்பாய் மாந்தர்தம் செவிக்கு நல்ல
தேவரின் னமுத மாகிச் செப்புவார்க் கும்ப ராவாம்
நாவலர் கவிக ளோதும் நற்றிறன் நாங்க ளெய்த. 28.

அரியஞா னியரி லங்கும் அவையின் கண் வாது வல்லார்
புரியும் போர்க் களத்தின் மிக்க புகழ்பெறும் புலவ வாதிக்
கரியவர் தம்மை வெல்லக் கருதுமென் நாநு னிச்சீர்
அரியினில் லிருக்கை மேவி யமர்ந்தருள் புரிந்தி டாயே. 29.

நினை நினைந் துன்ம யத்தை நேர்ந்தயா னொளிமி குத்த
உனைமனு தன்னா லேத்தி யொலியெழப் பெருங்கு ழாத்தில்
நினைவழிச் செல்லும் வாதில் நேர்படும் எதிர்ப்புக் கெல்லாம்
முனையுமா சூர னாகவளர்ந்து முன் நிற்ப னாக. 30.

பல்வகைக் கலைக ளெல்லாம் படிந்திடா வென்னை யந்தோ
நல்வகைத் தீர்த்தர் தம்மை நணுகிடுந் துறையு மோரேன்
நல்குவாய் பற்றி லார்க்கோர் நற்றுணை யருளே நீதான்
மல்கிட வதனை யேற்க மற்றியா ரென்னிற் றக்கார் ? 31.

அல்வழக் கனைத்து மொன்றும் அசைவில்திண் மருளைநின்றன்
நல்லருள் தந்தொ ழித்து நலந்திகழ் பொருளி னுண்மை
எல்லென வென்ற னுள்ளத் திலங்கிட வணியதாக
நல்கிடா யென்ற னுக்கு நாதனே ! பரிமு கத்தாய் ! 32.

பங்கயச் செங்கை தங்கும் புத்தகம் வித்த கம்மும்
சங்கொளிர் சக்க ரம்மும் சவிகொளும் படிக மென்ன
பொங்குயர் நிறமும் வெள்ளைப் புண்டரீ கத்தி ருப்பும்

தங்கியத் திருவ னாகித் தகவுரு மகிமை யென்றும். 33.

தங்கிய கலைக்கி றைவா ! தன்மையும் வெண்மை கூடித்
தங்கிய சுதைக் கதிர்கள் தங்களா லெனைந னைத்து
அங்கிநேர் தாபத் தோடே அகவிரு ளறவொ ழிக்கும்
மங்கலில் திங்கள் போலென் மனத்தினூ டுதித்திடாயே 34.

நாவலம் மேவி டற்கு நாவலர் வாதி யர்க்குத்
தாவரும் சிங்க மாகும் தனித்திரு வேங்க டத்தான்
தூவளப் பரிமு கன்மேல் துதித்துரைத் திட்டவிந்த
தேவினார் துதிப யில்மின் சித்தங்கொள் பத்தி யோடே. 35.

வாசமா மலராள் வாழ்க மாசில்வா கீசன் வாழ்க
ஆசிலா மறைகள் வாழ்க வருட்டிரு மொழிகள் வாழ்க
தேசிகன் நற்றாள் வாழ்க திகழ்சரண் நெறியும் வாழ்க
காசினி யுள்ளோர் வாழ்க கருதுபே ரின்ப முற்றே.

இது திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு

வெளியீட்டு நாள் 23.5.1954

ஆக்கியோர்

**ஸ்ரீமான் கீழ்வீதி ப்ரயாகை ஸ்ரீநிவாசராகவாச்சாரியார் ஸ்வாமி**